சிலப்பதிகாரத்திலுள்ள சில பெண்களின் பார்வைகள்

முனைவர் அ. வசந்தி
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
போப் கல்லூரி, சாயர்புரம்

முன்னுரை

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம். இந்த இலக்கியத்தில் பெண்களின் பெருமையையும், அவர்களின் அவல நிலையையும் காணலாம். பெண்கள் இந்நாட்டின் கண்கள் என்பர். அக்கூற்றுக்கேற்ப பெண்களின் கண்ணீர் ஓர் இடத்தை அழிப்பதை இக்காப்பியத்தை தவிர பிற காப்பியங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறவில்லை. ஒரு மனத்துயரமான காப்பியமாக ஆராயலாம்.

பெண்கள் நலனில் உள்ள மன்றங்கள்

பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் கொலை என்பது அன்று முதல் இன்று வரை சமூகத்தில் நீக்க இயலாத குற்றமாகி வருகிறது. இந்தியத்தண்டனைச்சட்டங்களில் கொலைக்கு என்று எந்த சட்டமும் இதுவரை சரியாக இயற்றப்படவில்லை எனலாம். ஐவகை மன்றங்களில் ஒன்றான பூதச்சதுக்கம் ஒன்று உள்ளது. பெண்களுக்கு எதிராக பொய்கரியாளர். புறம் கூற்றாளர்களைப் பாச கயிற்றால் கட்டி, அறைந்து உண்ணும் நாளங்காடி பூதம் பெண்கள் நலம் பேணும் சமூக மன்றம் இக்காப்பியத்தில் உள்ளது.

இளையோராயினும் முதியோராயினும் தனித்திருக்கும் பெண்களுக்கு பாதுகாப்பு என்பது கேள்விக்கு உள்ளாகி நிற்கும் இன்றைய சூழலில் ''அரசை வேலி அல்லது யாவதும் புரைதீர் வேலி இல்''[1] கீரந்தை என்ற அந்தணன் வெளியூர் செல்லும் போது தன் மனைவியைப் பாதுகாப்பார் யாரும் இல்லையே என வருந்துகிறான். அதற்கு அவன் மணைவி ''அரசனின் செங்கோல் ஆட்சியில் அவனது காவல் இருக்கும் போது வேறு பாதுகாப்பு எதற்கு? என்று கூறுகிறாள்.

அந்தணப் பெண் கைவிடப்படுதல்

அந்தணப்பெண்ணைக்கணவன்கைவிடக் காரணம் கீரிப்பிள்ளையை மனைவி கொன்றதே. தொட்டிலில் துயிலும் குழந்தையை வீட்டில் விடுத்துத் தண்ணீர் எடுப்பதற்கு குளத்துக்குச் சென்று திரும்பியவள் வாயில் குருதியோடு நின்ற கீரிப்பிள்ளையின் நிலையினைக் குழந்தையோடு தொடர்புபடுத்திக் கற்பனை செய்து பதறிடவே குடம் நழுவியது, அது கீரிப்பிள்ளையின் மரணத்துக்கு காரணம் ஆகியது. குழந்தையைக்காக்கக்கீரிப்பிள்ளை நாகத்துடன் போராடியதன் விளைவே கீரிப்பிள்ளையின் வாயில் குருதி, இருப்பதை அறியாது கீரிப்பிள்ளையின் மரணத்தைக் காரணம் காட்டி கடவது அன்று நின் கைத்தூண் வாழ்க்கை''என்று வடதிசை நோக்கி கணவனைப் பிரிந்து வருந்துகின்ற பெண்களின் வருத்தம் நீக்க வாழ்வியலுடன் இணைந்த வழிபாட்டியலையும் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

பிள்ளை நகுலம் பெரும்பிறிது ஆக,
எள்ளிய மனையோன் இணைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரும் மாமறை யாளன்,
கடவது அன்றுநின் கைத்துஉண் வாழ்க்கை,
வடமொழி வாசகம் செய்த நல்லேடு(2)

குழந்தை வளர்ப்பில் கவனம் தேவை

குழந்தை பராமரிப்பில் மிகுந்த கவனம் தேவை. குறிப்பாக உணவூட்டும் முறையில் கண்காணிப்பாக இருத்தல் அவசியம் என்பதற்கு சான்று மாலதி என்பாளின் துயரம்.

மாலதி மாற்றாள் மகவுக்குப் பால் அளிக்கப்
பால் விக்கிப் பாலகன் தான்சோரீ மாலதியும்
பார்ப்பானோடு மனையாள் என்மேற்படாதனவிட்டு

ஏற்பன கூறார் என்று ஏங்கி; மகக்கொண்டு, அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம்,

புகர்வெள்ளை நாகர்-தம் கோட்டம், பகல்வாயில் உச்சிக் கிழான்கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம், நிச்சந்தக் கோட்டம், நிலாக்கோட்டம், புக்குளங்கும் 'தேவிர்காள்! என்உறு நோய் தீர்ம்' என்று மேவியோர் (3)

முன்னொரு நாளிலே, 'மாலதி' என்பவள், தன்னுடைய மாற்றாளின் மகவுக்குப் பாலூட்டினாள். பால் விக்கிப் பாலகன் மரித்தான். மாலதியும், 'பார்ப்பானோடு அவன் மனையாளும் என்மேல் அடாத பழி கூறுதலைவிட்டு, ஏற்புடைய உண்மையைச் சொல்லார்களே!' என்று ஏங்கினாள். மகவை எடுத்துக்கொண்டு, கற்பகத்தரு நிற்கும் கோயில், ஐராவதம் நிற்கும் கோயில், பலதேவரின்கோயில், பகற்பொழுதுக்கு வாயிலோனான சூரியனின் கோயில், ஊருக்குரிய தேவதை இருக்கும் கோயில், வேலவனின் கோயில், வச்சிரப்படை நிற்கும் கோயில், பாம்பணையான் வீற்றுள்ள கோயில், அருகன் கோயில், சந்திரன் கோயில் ஆகிய இடமெல்லாம் சென்றாள். 'தேவர்களே! எனக்குற்ற நோயினைத் தீருங்கள்' எனவும் அழுதழுது வேண்டினாள்; யாதும் பயனில்லை. அதனால் குழந்தைக்கு சரியாக உணவே ஊட்ட வேண்டும் என்பதை இக்காப்பியம் விளக்குகிறது

முதியோரை காப்பாற்றிய மனிதநேயம்

உலகமயமாக்கலும் தாராளமயமாக்கலும் வலியுறுத்தி நிற்பதால் முதுமையை புறக்கணிக்கும் போக்கு தவிர்க்க இயலாதாகி வருகின்றமைக்குச் சான்று முதியோர் இல்லங்கள், பெற்றோரை ஆதரவற்றவர்களாக்கும் நகர நாகரிகம் முதியோரைப் பிச்சைக் காரர்களாக்குகிறது. முதியோர் நலம் காக்கும் இலக்கியம் சிலப்பதிகாரமாகும்.

ஞான நன்னெறி நல்வம்பு ஆயோன்
தானம் கொள்ளுந் தகைமையின் வருவோன்
தளர்ந்த நடையின்தண்டு கால் ஊன்றி
வளைந்த யாக்கை மறையோன்'

வீதியில் வருகிறான். மதங்கொண்ட யானையை அடக்க இயலாத பாகன் பறை ஒலி எழுப்பி எச்சரிக்கிறான். இளையவர்கள் - இயன்றவர்கள் விலகி விரைவாக வீதியிலிருந்து ஓடுகிறார்கள். முதுமையும், தள்ளாமையும் நிறைந்த மறையவர் மதயானையின் கையகப்படுகிறார். முதியவருக்கு எவ்விதத்திலும் உறவற்ற ஒருவர் மதயானையின் துதிக்கையிலிருந்து முதியவரை விடுவித்தார்.

உடம்பிலும் உள்ளத்திலும் குறைவற்ற சமூகமே முழுமையான சமூகம். அகவையமான - புறவயமான குறைகளை நீக்குவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தி, குறையற்ற மக்கள் சமூக உருவாக்கத்திற்கு மன்றங்கள் உள்ளன.

பிடர்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களிறு அடக்கிய
கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழகு மெய்யாளரும்'

ஒரு குடும்பத்தின் சாபமாகக் கருதப்படுவோர், குடும்பத்தில் இருந்து ஒதுக்கி விலக்கும் தொழு நோயாளிகள், மக்கள் கூட்டத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவோர், இவர்களின் துயர் துடைத்து நலம் செய்ய சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது ஐவகை மன்றத்தில் ஒன்றான இலஞ்சி மன்றம். இலஞ்சி மன்றத்தில் இருக்கும் பொய்கையில் கூனும் குறளும் ஊமும் செவிடும் அழகு மெய்யாளரும் முழுகி நீராடின் பழுதில் காட்சி நல்நிறம் பெற்று வணங்கி மகிழ்ந்து செல்லலாம் என்ற மன்றங்கள் உள்ளன.

கண்ணகியின் பண்புகள்

பெண்ணுக்குப் பெருமை தரும் சிலப்பதிகாரக் காப்பியத்தில் தலைவி கண்ணகி ஆவாள். இவள் புகார் நகரிலே வான்மழை போன்ற கொடைத் தன்மை உடைய மாநாய்கன் என்னும் வணிகன் மகளாகக் பிறந்தாள்.

மாகவான் றிகருவண்கை மாநாய்கன் குலக்கொம்பர் (1:23) (6)

என்ற பாடல் வரிகளின் மூலம் கண்ணகியின் பிற்பபை ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார்.

தீதுலா வடமீனின் திறம்இவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னும் கண்ணகியென்பாள்
(1:26:28) (7)

என்ற பாடல் வரிகள் மூலம் இவள் அழகில் இலக்குமி போன்றும் கற்பில் அருந்ததியை போன்றும், குணத்தில் பெண்கள் அனைவரும் தொழும் சிறந்த குணங்களைப் பெற்றிருப்பவள் எனவும் கண்ணகியை ஆசிரியர் அறிமுகப்படுத்தினார். மேலும், கண்ணகியின் திருமண நிகழ்ச்சி தொடங்கியது. கோவலன் கண்ணகியைப் பாராட்டும் பகுதியாக மனையறம் படுத்த காதை அமைந்திருக்கிறது.

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும் பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே (8)

இதன் மூலம் கண்ணகி மாசுமறுவற்றவள் என்பதும் அவள் தேன் போன்று சுவையானவள் என்பதும் சிறப்பும் பெருமையும் உடையவள் என்பதையும் இலக்கியத்தில் காணப்படுகிறது.

மாதவியின் உண்மையான துயரங்கள் :

வசந்த மாலைவாய் மாதவி கேட்டுப்
பசந்த மேனியள், படர்நோய் உற்று,
நெடுநிலை மாடத்து இடைநிலத்து- ஆங்கு, ஓர்
படைஅமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்தலும்;
வீழ்துயர் உற்றோள், விழுமம் கேட்டுத்
தாழ்துயர் எய்தித் தான்சென்று இருந்ததும்;
இருந்துயர் உற்றோள், 'இணையடி தொழுதேன்
வருந்துயர் நீக்கு' என, மலர்க்கையின் எழுதி,
"கண்மணி அனையாற்குக் காட்டுக" என்றே
மண்உடை முடங்கல் மாதவி ஈத்ததும்;
ஈத்த ஓலைகொண்டு, இடைநெறித் திரிந்து,
தீத்திறம் புரிந்தோன் சென்ற தேயமும்,
வழிமருங்கு இருந்து மாசுஅற உரைத்து-ஆங்கு
அழிவுடை உள்ளத்து ஆர்அஞர் ஆட்டி,
போது அவி புரிகுழல் பூங்கொடி நங்கை
மாதவி ஓலை மலர்க்கையின் நீட்ட'

வசந்தமாலையின் மூலம் இவற்றையெல்லாம் மாதவியும் கேட்டாள். கேட்டதும், அம் மாதவியின் மேனியில் பசலை படர்ந்தது. ஏக்கம்என்னும்பெருநோயுற்றாள். நெடுநிலை மாடத்தில் இடைநிலத்திலே, அவ்விடத்தில் இட்டிருந்தஓர்பள்ளியறைக்கட்டிலிலேபடுத்த படுக்கையாகி விட்டாள். பல்பூஞ்சேக்கைப் பள்ளியுள், கோவலனோடு முன்னர்க் கூடி மகிழ்ந்த நினைவுகள் அவள்பால் அலை மோதின. அவள் படும் பெருவேதனையைக் கேட்டு, ஆழ்ந்த வருத்தமுற்று, நானும், ஒருநாள் அவளைக் காணச் சென்றேன்.

மிக்க துன்பமுற்று அவள், 'உம் இணையடி தொழுதேன். இப்படி எனக்கு வருகின்ற துன்பத்தினை நீக்கியருள்வீர்' என்று என்னை வேண்டினாள். தன் மலர்க்கையால் ஓர் ஓலையினை எழுதி. 'என் கண்மணி அனையாற்கு இதனைக் கொண்டுபோய்க் காட்டுக' என்று சொல்லி, முத்திரையிட்டு, என் கையிலேயும் தந்தாள். அதனைப் பெற்றுக்கொண்டு, பலப்பல நாடுகளும் சுற்றி வந்து, இங்குதான் உம்மை யான் கண்டேன்'.

இவ்வாறு கூறியவனாக, அழிந்த உள்ளமும் பெருந்துயரமுங்கொண்டு, மலர்விழிபுரிகுழல் மாதவியானவள் தன்னிடத்துத் தந்த அந்த ஓலையினைக் கோவலன் கையிடத்தே நீட்டினான். கோசிகன். கோவலனின் பிரிவு பசலை நோய்க்கு காரணமாக உள்ளது.

முடிவுரை

கண்ணகியின் பண்புகளில் கற்புள்ள கண்ணகி இல்லத்தாளின் இனிய பண்புகளைக் காண முடிகிறது. மாதவியின் துயிரநிலைகள் மற்றும் அந்தணப் பெண்ணின் நிலைகள். பெண்கள் குழந்தைளை எப்படி வளர்க்க

வேண்டும் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது

அடிக்குறிப்புகள்

1. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.257. பா வரி 23:45*
2. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.187.*
3. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.104.*
4. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.186.*
5. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.235.*
6. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.12.*
7. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.12.*
8. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.20.*
9. *சிலப்பதிகார மூலமும் உரையும் ப.161.*

துணை நூற்பட்டியல்

1. *புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், கௌரா புத்தக மையம், சென்னை*